மலர் 2 இதழ் 1 ஜுலை, 2017 ISSN : 2454-3993

# இலக்கியம் போற்றும் தமிழ்ப் பண்பாடு

க. விஜயராகவன்
உதவிப் பேராசிரியர் & துறைத்தலைவர்
தமிழ்த்துறை
வி.எம்.கே.வி. கலை அறிவியல் கல்லூரி
விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழகம்
சேலம்

இலக்கியப் படைப்புகள், கல்வெட்டுக்கள், தொல்பொருள் அகழ்வாய்வுகள், கட்டிட கட்டமைப்புகள், அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள், எழுத்து வடிவங்கள், ஆற்றுப் படுகைகளில் கிடைத்த நாணயங்கள், அரசர்களின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்கள் ஆகியன சங்ககால மக்களின் வாழ்க்கை வரலாற்றினை அறிய உதவும் சான்றுகளாக விளங்குகின்றன. எனினும் இலக்கியங்களே ஆதி முதல் அந்தம் வரையில் மனித இனத்தோடு இலங்கி நிற்கிறது. இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளதாலேயே அது நூற்றாண்டுகளைக் கடந்து வாழும் கலைச்செல்வமாக ஒளிர்விட்டு பரந்து பரிணமிக்கின்றது. பழந்தமிழர் பின்பற்றிய பண்பாடு தொடர்புடைய கருத்தாக்கங்களை இளம் தலைமுறைக்கு உணர்த்தும்வகையில் இக்கட்டுரை வடிவம் கொள்கிறது.

**பண்பாடு-விளக்கம்**

“பண்பு” என்பதின் சொல்லடியாக உருவானதே “பண்பாடு” எனும் சொல். “பண்பு” என்பதற்கு பிறரது இயல்பை அறிந்து ஒழுகும் நற்குணம் என்கிறது “Tamil Lexicon”. பண்பாடு என்பதற்கு இணையான “Cultural” எனும் ஆங்கிலச் சொல்லுக்கு “பண்பட்ட நிலை, அறிவு வளர்ச்சி, நாகரிகமான தன்மை” என்னும் பொருள்களை ஆங்கிலம்–தமிழ் டிக்சனரி குறிப்பிடுகிறது. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி பண்பாடு என்பது “மக்களின் சிந்தனையாகும். குறிப்பிட்ட இடத்து வாழும் மக்களின் பழக்கவழக்கம், நம்பிக்கை, கலைச் சிந்தனைகள் மற்றும் அதனை வெளிப்படுத்தும் முறைகள் முதலியனவாகும்“ என்கிறது.

“உலகின் பல பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல், உறைவிடம், உணவுப்பழக்கம், நம்பிக்கைகள், பழக்கவழக்கம், வழிபாடுகள், தலைமை முறைகள், சடங்குகள் (பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற நிகழ்வுகளில் அமைந்த சடங்குகள்) ஆகியவை பண்பாடு“. இந்திய மெய்ஞ்ஞானம் பண்பாட்டு ஆய்வு மாலை (பக்– 53).

பண்பாடு என்பதற்கு விளக்கம் தர முயல்பவர்கள் கலித்தொகைப் பாடலை நிச்சயம் சுட்டிக் காட்டுவர். ஆற்றுதல், போற்றுதல், அன்பு, அறிவு, செறிவு, நிறைவு, முறை, பொறை போன்றவற்றிற்கு மட்டுமல்லாமல் பண்பு என்பதற்கும் சொற்பொருள் விளக்கமும் சுவை நலமும் நிறைந்த பின்வரும் பாடல் குறிப்பிடத்தக்கதாகும்.

“ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப்பவது பாடறிந்து ஒழுகுதல்”

எனச் சுட்டி நிற்கிறது கலித்தொகைப் பாடல். இப்பாடலின் பதப்பொருளைச் சுட்டினால் பெரிதும் பயனுடையதாகும்.

**ஈகைத் திறம்**

“ஈதல் இசைப்பட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு”

என்ற பொய்யாமொழிக்கேற்பச் சங்கத்தமிழர் ஈகையில் தழைத்தோங்கி விளங்கினர். இதற்கு முதற்கண் கடையெழு வள்ளல்களைச் சான்றாகக் கூறலாம்.

“ஈத்தது இரக்கான் ஈத்தொறும் மகிழான் ஈத்தொறும் மாவள்ளியன்” என்பது வாழியானைப் பற்றி உலகோர் கூறும் புகழுரை. அத்தகைய புகழனாகிய நின்னைக் கண்டு இன்புறும் பொருட்டாகவே நானும் வந்தேன் என்கிறார் கபிலர். கொடுக்குந்தோறும் கொடுக்கப்படும் பொருள் தன்னிடமிருந்து செலவாகிறதென வருந்தான். அளவோடு கொடுத்தால் போதும்மென்றும் கருதாத குணத்துடன் வாரி வழங்கும் குணமுடையவன் சேரமான்.

இவர்களேயன்றி, ஒய்மா நட்டை ஆண்ட நல்லியக் கோடன் என்ற மன்னனோ உலகே அறியும்வண்ணம் தான் ஒருவனாகவே தாங்கிய மனவலிமையும். தளரா முயற்சியும்கொண்டு ஆற்றியவன். அவன் பரிசளிக்கும் வன்மையுடையோன். தகுதியற்றவரும் மனம் கோணாவண்ணம் வாரிவழங்கும் இயல்பினன். அவன் தன்னை நாடி வரும் இரவலர்களுக்கு முதற்கண் மெல்லிய ஆடையினை நல்கியும், மயக்கம் தரும் கள்ளினைப் பருகத் தருதும், வீமன் எழுதிய சமையல் நூல் குறிப்பில் உள்ளவாறு சிறிதும் மாறாமல் அறுசுவை அடிசில் தயாரித்து, அதனைப் பொற்கிண்ணத்தில் ஏந்தி விருப்பமுடன் தானே அவர்கள் அருகிருத்து அழுதும் செய்விப்பவன் அதோடன்றி, தன் படைத்தலைவர்கள் கொண்டுவந்த பரிசுப் பொருள்கள் அனைத்தினையும் நல்குவதோடு, சாதிலிங்கம் கொண்டு நிறமூட்டப் பெற்ற அழகிய போர்வையினையும், திறமை மிக்க தச்சர்கள் தாமே ஏறிச் செலுத்தி ஆராய்ந்த புகழ்வாய்ந்த நல்ல தேரினையும், வெண்ணிற எருதுகளையும், பாகனுடன் சேர்ந்து யானை, குதிரை ஆகியவற்றினையும் நல்கியும் அன்றைய தினமே அவ்விரவலர்களை அனுப்பியும் வைப்பவன்.

**விருந்தோம்பல்**

தமிழ்களின் தலையாயப் பண்பு விருந்தோம்பலைச் சிறந்த அறமாகக் கருதினர்.

“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு”

என்று இல்லறத்தின் சிறந்த பயன் விருந்தோம்பல் என்று வள்ளுவர் இலக்கணம் வகுக்கின்றார்

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

சங்ககால மக்கள் தன் உற்றார் உறவினரேயன்றி, புதிதாக தன் இல்லம் நாடி நள்ளிரவில் வருபவர்பளுக்கும், 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்ற கொள்கையினைக்கொண்டு வாழ்ந்து அவர்களுக்கு அறுசுவை அடிசில் நல்கி சிறப்பு செய்வித்ததை இலக்கியத்தில் கண்டு இன்பம் துய்க்கலாம், இவை ஆற்றுப்படை நூல்களில் விரவி வருகின்றன. வள்ளல் பெருந்தகையராய் விளங்கிய மன்னர்களைப் பாடிப்பரிசில் பெற்ற புலவர் பலர் தன் எதிரே, தன்போல் பரிசில் பெற வரும் பிற புலவர்களை அம்மன்னர்களிடம் வழிநடந்தும் மாண்பின் வாயிலாக அம்மன்னர்களின் விருந்து உபசரிப்புகள் புலனாகின்றன.

**நன்றி மறவாத் தன்மை**

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்கிறார் வள்ளுவர்.

செய்ந்நன்றி மறவாமை என்பது செந்தமிழ் நாட்டு மக்களின் தலையாய பண்புகளுள் ஒன்றாகும். சங்ககாலக் கவிஞர்கள் தங்களைப் பேணிய வள்ளல் பெருமக்களையும், அவர்தம் நாடுகளையும், தாங்கள் கற்ற கல்வி வாயிலாக உவமையாகவும், பிறவற்றாலும் எடுத்தியம்பியுள்ளனர்.

**நம்பிக்கை சார்ந்த பழக்கவழக்கங்கள்**

வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளை வேத்தியல், பொதுவியல் என்று பகுத்துக்காண்பது தமிழ்நெறி. பொதுமக்களின் நம்பிக்கை சார்ந்த பழக்கவழக்கங்கள் சங்ககால நெறிப்படி தொகுக்கப்படுகின்றன.

- ☆ அரிசி மாவால் பெண்கள் கோலமிடுவர்
- ☆ ஆண்கள் பூமாலை அணிந்து கொள்வதைப் போல் பெண்கள் தழை ஆடைகளை ஒப்பனைக்காக அணிவர்.
- ☆ ஊர்ப் பொது இடத்தில் கோவில் சுவரில் கடவுள் ஓவியம் வரைந்து அதற்கு பலிப் படையல் செய்வர்
- ☆ பெண்கள் செந்நிறம் பூசி தான் பூப்பு எய்திய செய்தியை வெளியிடுவர்.
- ☆ நிறைமதி நாளில் விடியற்காலையில் நடைபெறும் திருமணத்தில் உழுத்தம் பருப்பு வடையுடன் பெருவிருந்து அளிக்கப்படும். பந்தல் போட்டு புதுமணல் பரப்பி, விளக்கு வைத்து, மாலைகள் தொங்கவிடப்படும்.
- ☆ தாலியைப் புதுநாண் என அழைத்து அதனை ஒரு காப்பீட்டாகக் கருதுவர்.
- ☆ வயது முதிர்ந்த பெண்கள் நிறைகுடத்துடன் முன்வரப் புதியவர் சிலர் விளக்குடன் பின்வருவர். மணமக்களின் தலையில் நீரில் நனைத்த பூக்களைத் தூவி வாழ்த்துவர்.
- ☆ கணவனை இழந்த பெண்ணின் தலைமயிர் கொய்யப்படும்; கை வளையல்கள் களையப்படும்; அல்லி இலையில்தான் அவர்கள் உணவு உண்ணவேண்டும்.

- ☆ மகளிர் மணலில் கழங்கு விளையாடுவர். கழங்குக் காய்கள் முத்தாகவோ, முத்துப் போன்ற வெண்ணிறக் கூழாங் கற்களாகவோ இருக்கும். மகளிர் அந்தக் கழங்குக் காய்களை மணலில் பரவி ஒன்றைஒன்று தொடும்படி சுண்டி விளையாடுவர்.
- ☆ திருவிழாக் காலங்களில், ஊரில் விழா நடக்கும் காலத்தைக் குயவன் தெருத்தெருவாகச் சென்று அறிவிப்பான்.
- ☆ வெறியாட்டு நிகழும்போது வெறியாடவைக்கும் பெண்ணுக்கு அரலை மாலை (அரளிப் பூ மாலை) சூட்டுவர்.
- ☆ பல நம்பிக்கை சார்ந்த பழக்கவழக்கங்களை மக்கள் பின்பற்றிதைச் சங்க இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது.

**விழாக்கள்**

கொண்டாட்டமும் மகிழ்ச்சியும் பொழுதுபோக்கும் நல்லுறவுமே விழாக்களின் நோக்கமாகும். விழாக்கள் மக்களால் விரும்பி நடத்தப்படுவதாகும். தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவனவற்றுள் திருவிழாக்கள் சிறப்பிடம் பெறுகின்றன. சங்ககாலத்தில் திருவிழாக்கள் நிகழ்ந்ததை “மடிய விழாவின் யாணர் நன்னாடு” என்று புறநானூறு (212) கூறுகிறது.

திருமண விழா, பிறந்தநாள் விழா, பூந்தொடை விழா, உள்ளிவிழா, ஓணவிழா, கார்த்திகை விழா, முருகன் விழா, முந்நீர் விழா, இந்திர விழா, காமன் விழா என பலதரப்பட்ட விழாக்களைக் கொண்டாடி பண்பட்ட வாழ்வின் இன்பத்தைத் தமிழர் அறிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**சடங்குகள்**

ஆசையாலும் அச்சத்தாலும் உருப்பெறும் பழக்கவழக்கங்கள் நாளடைவில் மக்களின் வாழ்க்கைக்கேற்ப சடங்குகளாக மாற்றம் பெற்று வாழ்வில் முக்கிய இடம்பெற்றுப் பண்பாட்டின் எச்சமாக நிலைத்துவிடுகின்றன. மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை பலவகையான சடங்குகள் இடம்பெறுகின்றன. அச்சடங்குகள் மக்களின் வாழ்க்கைக்கேற்பவும் தரத்திறகேற்பவும் வளர்ந்தும் மாறியும் அமைகின்றன. நாகரிகம் வளர்ந்துள்ள இன்றைய காலகட்டத்திலும் பல வகையான சடங்குகள் பின்பற்றப்பட்டு வருகின்றன்.

பிறப்பின்போது நடத்தப்படும் சடங்குகள், குலதெய்வ வழிபாடு, பெயர் சூட்டல், முடியெடுத்தல், காதுகுத்தல், பூச்சடங்கு, திருமணச்சடங்கு (திருமணம் ஆகவில்லையெனில் அதற்கான சடங்குகள்), இறப்பின்போது நடத்தப்படும் இறுதிச் சடங்கு என இவை மட்டுமின்றி தனித்தனி சமுதாயத்தால் (இனத்தால்) உருவாக்கிக் கொள்ளப்பட்ட சடங்குகள் என பற்பல நிலைப்பாடுகளும் பணபாட்டில் உட்கூறுகளாக மக்களால் பெரிதும் பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழர் தம் இலக்கியங்களில் அவர்தம் பண்பாடு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாகரிகத்தையும் பண்பாட்டையும் கூறும் காலக் கண்ணாடியாக உலக அளவில் தமிழ் இலக்கியம் தனித்தன்மை பெற்றவையாக விளங்குகின்றன. காலங்களை வென்று இலக்கியங்கள் நிலைத்து நின்று தமிழ் மக்களின் பண்பாட்டைப் பறைச்சாற்றும் என்பதில் ஐயமில்லை.